1991 சனவரி 25] [பேரவைத் தலைவர்]

களை வெளியில் சொல்பவர்கள் சட்டமன்ற விதிகளை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் பேரவைத் தலைவருடைய தீர்ப்புகளுக்கு உள் நோக்கம் கற்பிக்கக்கூடாது.

10-15 மணி

இன்னும் சொல்லப் போனால் பேரவைத் தலைவர் இன்னொருவர் ஆணையின் கீழ் செயல்படுகிறார், இன்னொருவருடைய கருத்தைக் கேட்டுத் தான் செயல்படுகிறார் என்று வெளிப்படையாக இப்படி எல்லாம் ஜனநாயகத்தைக் கேலி செய்வது என்பது கண்டிக்கக்கூடியது. கண்டிப்பது மட்டுமல்ல, கடுமையான நடவடிக்கைக்கும் உட்பட்டது. இது இந்த அளவில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களைச் சேர்ந்த சட்டப் பேரவைத் தலைவர்கள் ஒருங்கு கூடுகின்ற கால கட்டத்தில், எல்லா மாநிலங்களுடைய சட்டப் பேரவைத் தலைவர்கள் ஒருங்கு கூடி நாடாளுமன்றத் தலைவரோடு சேர்ந்து இணைந்து பணியாற்றுகின்ற காலத்திலும் இவற்றிற்குத் தக்க முடிவு எடுக்கப்பட்டு எந்த வகையில் இவற்றைத் தடுப்பதற்கான வேறு வகையான தீர்வுகளைக் காண முடியும் என்பதையும் நாங்கள் சிந்திப்போம். எனினும், உங்களுடைய கருத்தை நான் மனத்தில் வைத்துக் கொண்டு 2—2—1991 அன்று அலுவல் ஆய்வுக் குழுவில் மீண்டும் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம் என்று கூறி இந்த அளவோடு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை.

துக்ளக் இதழ்மீது—15–1–1991 ஆம் நாளைய இதழில் எம்.எல்.ஏ.–க்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் " துக்ளக் " இதழ் ஆசிரியர் மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து எழுப்புதவற்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்துரிமைக்கும், பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் மிகுந்த மதிப்பு அளிக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்தவன் நான். எனினும் ஒரு பத்திரிகை ஆசிரியர் மீது உரிமை மீறல் பிரச்சினை பற்றி எழுப்ப நேர்ந்ததே என்பதற்காக வருத்தத்தோடும், வேதனையோடும், இதை நான் எழுப்புகிறேன்.

'' துக்ளக் '' இதழில் 15—1—1991 ஆம் தேதி கேள்வி-பதில் பகுதியில் ஒரு கேள்வி. '' வர வர எம்.எல்.ஏ.-க்கள் மதிப்பு உயர்ந்து வருவதைப்பற்றி '' என்ற ஒரு கேள்விக் குறியோடு எழுப்பி, அதற்குப் பதிலாக, '' எல்லாவற்றிற்கும் விலை ஏறும்போது விஷத்திற்கும் விலை ஏறத்தானே செய்யும் ! '' என்று அந்த இதழ் ஆசிரியர் பதில் அளித்து இருக்கிறார்கள். ஒரு சில எம்.எல்.ஏ. க்கள் பற்றியோ, யாரோ ஒரு எம்.எல்.ஏ. வைப் பற்றியோ இப்படிப்பட்ட விமர்சனம் செய்திருந்தால் நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்த சட்டமன்றத்தைப் பற்றி அல்ல, இந்த நாடு முழுவதும் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்கள் அத்தனை பேரையும், இங்கே விமர்சனம் செய்யும்போது இந்த சட்டமன்ற உறுப்பினர்களை அவமதிப்பது மட்டுமல்ல, இந்த ஜனநாயகத்தையே அவமதிப்பது ஆகும். '' விஷம் '' என்று எம்.எல்.ஏ. க்களைச் சொல்லிவிட்டால் அப்படிப்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் தேவையில்லை. விஷத்தை யாரும் தேவையென்று சொல்ல மாட்டார்கள். அப்படி என்று சொன்னால் ஜனநாயகமே தேவையில்லை என்றும் இந்த நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லவேண்டும் என்றும் அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா ; சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா என்பதே புரியவில்லை. ஆகவே, இது ஜனநாயகத்தை அவமதிக்கக்கூடியது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப் படுத்துவது மட்டுமல்ல, மக்களாட்சித் தத்துவத்தையே அவமதிப்பது என்ற முறையில் இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவிற்கு விடுவதற்குத் தாங்கள் இசைவு தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து இதழ் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டுப் பின்னர் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

சென்னை பொது மருத்துவ மனையில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காதிருப்பது குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சென்னை, அரசு பொது மருத்துவமனையில் உள்ள பதின்மூன்று அறுவை சிகிச்சை நிலையங்களில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காமல் இருப்பது குறித்த'' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :